**கவனிக்க.**- 2008.05.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1550 - 2008 මැයි 16 වැනි සිකුරාදා - 2008.05.16

1550 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (II ஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 502 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 502 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 504 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்**. வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மே 23 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மே 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு

இவ் ஆணைக்குழுவின் பாவித்தலின் பின் அகற்றப்பட்ட பொருட்கள் ஏல விற்பனையில் விற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1. ஏலத்தில் விற்பதற்கான பொருட் பட்டியல் கீழ் குறிப்பிடப் பட்டுள்ளது.
2. இப் பொருட்கள் 2008.06.05 ஆந் திகதி மு. ப. 10.00 இலிருந்து பி. ப. 3.00 வரை ஆணைக்குழு அலுவலக பூமியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. 2008.06.06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பொருட்கள் ஏல விற்பனை ஆரம்பமாகும். பொருட்களை வாங்குபவர்கள் அன்றைய தினமே பணம் செலுத்தி வாங்கிய பொருட்களை பி. ப. 4.00 மணிக்கு முன்பதாக ஆணைக்குழு அலுவலகத்தில் இருந்து அகற்றிக் கொள்ளல் வேண்டும்.
4. பொருட்களை வாங்குபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் வருகைதர வேண்டும்.

### ஏல விற்பனை செய்யப்படும் பொருட்களின் பட்டியல்

| | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சாய்மனக் கதிரை | 01 |
| 2. | பாவித்த டயர் | 116 |
| 3. | முக்காலி (இரும்பு) | 01 |
| 4. | மரக் கட்டில் | 03 |
| 5. | பாவித்த வாகன கெஸட் | 02 |
| 6. | ஒலிம்பியா - ஆங்கில தட்டச்சு இயந்திரம் - 6784338 | 01 |
| 7. | மின் கேத்தல் | 03 |
| 8. | மின் காற்றாடி (கூரை) | 05 |
| 9. | ஒலிம்பியா கம்பெக் 5DM மின் தட்டச்சு இயந்திரம் | 02 |
| 10. | கம்பியூட்டர் | 01 |
| 11. | மின் காற்றாடி கிற்பாட்டி | 01 |
| 12. | மழை நீர் வடிங்தோடி | 50 |
| 13. | பலகைத் துண்டுகள் (அதிக அளவு) | Lot 01 |
| 14. | கூரைத் தகடு (அஸ்பஸ்டஸ்) | 20 |
| 15. | கதிரை (இரும்பு) | 02 |
| 16. | நீர் வடிகட்டி | 01 |
| 17. | கண்ணாடி அல்மாரி (சிறியது) | 01 |
| 18. | அலுமினியம் சின்க் | 01 |
| 19. | புலோரஸன்ட் மின் குமிழ் ஹோல்டர் | 12 |
| 20. | மேசை (லாச்சு 01) | 01 |
| 21. | நிலையுடன் கூடிய கதவு (கண்ணாடி) | 03 |
| 22. | அலுமினிய சுற்றுவட்டத்துடன் கூடிய கதவு | 01 |
| 23. | கண்ணாடி சீட் (அடி 4X 4) | 02 |
| 24. | கருங்கல் (கியுப்) | 3/4 |
| 25. | சுவர்க் கடிகாரம் | 01 |
| 26. | கைக் கதிரை | 03 |
| 27. | பைபர் சீட் | 03 |
| 28. | மரம் கதிரை | 43 |
| 29. | தலைக் கவசம் (ஹெல்மட்) | 02 |
| 30. | கதிரை | 06 |
| 31. | இரும்பு கபட் (இலாச்சு 4) | 02 |
| 32. | இரும்பு கபட் (இலாச்சு 2) | 02 |
| 33. | பலகை மேசை (இலாச்சு 2) | 02 |
| 34. | கைக் கதிரை (மரம்) | 02 |
| 35. | கம்பியூட்டர்<br>மொனிடர் 99053 A 14541 -1<br>கெனன் லேசர் பிரின்டர் L 10571 E - 1<br>விசைப்பலகை T 511044546 - 1<br>சீ. பீ. யூ. 6525231 LZ - 1<br>மவுஸ். LZ 601153428- | 01 |
| 36. | சிறிய மேசை | 02 |
| 37. | பலகை மேசை (இலாச்சு 2) | 01 |
| 38. | பலகை மேசை (இலாச்சு 2) | 01 |
| 39. | மேசைப் பலகை | 01 |
| 40. | பலகை மேசை (இலாச்சு 2) | 01 |
| 41. | திரும்பும் கதிரை | 01 |
| 42. | பலகை மேசை | 01 |
| 43. | அலுமினியம் கதவு (3'X4') | 01 |
| 44. | கண்ணாடி அல்மாரி (6'X2') | 01 |
| 45. | அலுமினியம் - பிட்டிங்ஸ் (7'X4') | 01 |
| 46. | பிளாஸ்டிக் கதவு | 01 |
| 47. | ஒலிம்பியா ஆங்கில தட்டச்சு இயந்திரம் -M86026562 | 01 |
| 48. | ஒட்டுப்பலகை (பிலைவூட்) கதவு சாவியுடன் கூடியது (2 1/2'X7') | 01 |
| 49. | மோட்டார் சைக்கில் - சுசுகி GS 125 (142-xxxx) | 02 |
| 50. | யன்னல் திரை சீலை (வெவ் வேறு அளவு) | 18 |

லக்ஷ்மி ஜயவிக்ரம,
இயக்குநர் நாயகம்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்கள்,
விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம்,
36, மலலசேகர மாவத்தை
கொழும்பு 07.
29.04.2008

5 - 279

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவில் காலத்திற்கான கள்ளுத் தவறணைகள் வரியை விற்றல் - 2008/2009

(2008 ஆம் ஆண்டு ஆடி மாதம் 1 ஆந் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை)

2008 ஆம் ஆண்டு ஆடி மாதம் 1 ஆந் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு ஆனி மாதம் வரையிலான காலப்பகுதியில் கள்ளு சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி 20 ஆந் திகதி இல. 207 இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளு வரியை விற்கும் நிபந்தனைகளுக்கும் சகல கலால் அனுமதிப் பத்திரத்திற்கும் தொடர்பாக அவ்வேளையில் நடைமுறையில் இருக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக கீழக்காணும் அட்டவணையில் குறிப்பிடும் கள்ளுத் தவறணைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் பிரதேச செயலாளர் அலுவலகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரிக் கேள்விப்பத்திர மொன்றில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் கீழக்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிட்டமைக்கான பற்றுச்சீட்டும் குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலையில் 15% க்கு பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் சீல் வைக்கப்பட்ட உறையினுள் போடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "....................................இல.................................................கள்ளுத் தவறணைக்கான கேள்வி" என்று குறிப்பிட்டு கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி தவறணையின் பெயர் மற்றும் இலக்கத்தையும் குறிப்பிட்டு 2008.05.30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். அல்லாதவிடத்து அக்குறிபிட்ட நேரத்திற்கு முன்பாக மஹவெவ பிரதேச செயலாளர் அலவலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்வது 1982.08.20 ஆந் திகதிய இல. 207 இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் காட்டப்பட்ட கள்ளு வரிகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

5. 2008.05.30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்ததும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல கேள்விப்பத்திர விண்ணப்பதாரிகளும் மஹவெவ பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பிரசன்னமாகி இருக்க வேண்டும்.

6. குறித்த திகதியில் விற்க முடியாது போன கள்ளுத் தவறணை மீள் விற்பனை செய்வது 2008.06.16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்வது இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். இது பற்றிய மேலதிக விபரங்களை மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். ஏ. ஏ. பீ. எஸ். நிசங்க,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.

எனது இலக்கம் : மவெ/இ/02/06/01
பிரதேச செயலாளர் அலுவலகம்,
மஹவெவ,
2008.04.29

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி/நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01 | மஹவெவ | அடப்பரகம | 2008.05.30 (மு.ப. 10.00) | 500 |
| 02 | மஹவெவ | மட்டக்கொடுவ | 2008.05.30 (மு.ப. 10.00) | 500 |
| 03 | மஹவெவ | தொடுலால தெற்கு | 2008.05.30 (மு.ப. 10.00) | 1,000 |

5-261

---

### மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் மீண்டும் கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2008 /2009

(கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை 2008 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் 2009 ஜுன் மாதம் வரை)

2008 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளுவிற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கும் ;
(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணைகளை குத்தகை இடும் நிபந்தனைகளுக்கும் அமைவாக

2. எந்தவொரு பிரதேசச் செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிய படிவத்தில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புப்பணமாக மாதம்பை பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு அதன் இடப்பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் :- "...................... இலக்கமுள்ள பம்பல கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" என குறிப்பிட்டு 2008. 05. 29 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு மாதம்பை பிரதேசச் செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பிரதேச செயலாளர் பிரதேச செயலகம், மாதம்பை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஒகத்து 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கை குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

5. 2008.05.29 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகமல் தவறணைகள் ஏதும் இருப்பின் இவற்றுக்கான மீள்விற்பனை 2008.06.13 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மாதம்பை பிரதேசச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விக்ரம வராகொட
பிரதேச செயலாளர்,
மாதம்பை.

பிரதேச செயலகம்,
மாதம்பை
2008. 04. 30

**அட்டவணை**

| இல | பகுதி | கிராமம் | தவறணைகள் கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதி யும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01. | பிடிகல் கோரலை பம்பல வடக்கு | பம்பல | 2008.05.29 மு. ப. 10.00 மணி | ரூ. 1000.00 |

5 - 284

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது:-

கம்பெனியின் பெயர் : பவர் இன்வெஸ்ட்மன்ட் (பிறைவேற்) லிமிட்டெட்.

கம்பனியின் இலக்கம் : பீவீ 63406

பதிவு அலுவலகம் : இரண்டாவது மாடி (இல. 42) சேர் மொஹமட் மாக்கான் மார்க்கார் மாவத்தை, கொழும்பு 03.

சபையின் கட்டளைப்படி,

செக்ரட்டரீஸ் அன்ட் ரெஜிஸ்ட்ரார்ஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

(முதலாவது மாடி), "கேபீஎம்ஜீ பில்டிங்",
32ஏ, சேர் மொஹமட் மாக்கான் மார்க்கார் மாவத்தை,
கொழும்பு 03.

5- 217

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழே பெயர் மற்றும் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்பட்டது:-

கம்பெனியின் பெயர் : ஏசீயன் பிஸ்நஸ் மனேஜ்மென்ட் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்.

கம்பனி இலக்கம் : பீவீ 63454

பதிவு அலுவலகம் : இல. 42, இரண்டாவது மாடி, சேர் மொஹமட் மாக்கான் மார்க்கார் மாவத்தை, கொழும்பு 03.

சபையின் கட்டளைப்படி,

செக்ரட்டரீஸ் அன்ட் ரெஜிஸ்ட்ரார்ஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

(முதலாவது மாடி), "கேபீஎம்ஜீ பில்டிங்",
32ஏ, சேர் மொஹமட் மாக்கான் மார்க்கார் மாவத்தை,
கொழும்பு 03.

5- 218

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், ஓர் கம்பனி கீழ்க்கண்ட பெயர் மற்றும் இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பெனியின் பெயர் : அக்ஸ்ரா அக்ரி பிஸ்நெஸ் (பிறைவேற்) லிமிட்டெட்.

கம்பனி இலக்கம் : பீவீ 63649

பதிவு அலுவலகம் : இல. 42, இரண்டாவது மாடி, சேர் மொஹமட் மாக்கான் மாக்கார் மாவத்தை, கொழும்பு 03.

சபையின் கட்டளைப்படி,

செக்ரட்டரீஸ் அன்ட் ரெஜிஸ்ட்ரார்ஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

(முதலாவது மாடி), "கேபீஎம்ஜீ பில்டிங்",
32ஏ, சேர் மொஹமட் மாக்கான் மாக்கார் மாவத்தை,
கொழும்பு 03.

5- 219

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழே பெயர் மற்றும் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்பட்டது:-

கம்பெனியின் பெயர் : ஒஸ்டின் மெனேஞ்மன்ட் (பிறைவேற்) லிமிட்டெட்.

பதிவு செய்யப்பட்ட திகதி : 2008.04.08

கம்பனியின் இலக்கம் : பீவீ 63742

பதிவு செய்யப்பட்ட
கம்பனியின் விலாசம் : இல. 30/ 84, பெரேரா கார்டின்ஸ், பெரேரா மாவத்தை, பெலவத்தை, பத்தரமுள்ள.

சபையின் கட்டளைப்படி,

ஒஸ்டின் மெனேஞ்மன்ட் (பிறைவேற்) லிமிட்டெட்.

5- 224

---

**பேர்ஷிப் லைன்ஸ் லிமிட்டெட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரி வின் கீழ், கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

பேர்ஷிப் லைன்ஸ் லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பெனியொன்று 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதி PB 3508 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது கொழும்பு 03 எட்வட் ஒழுங்கை இலக்கம் 35 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்கமாய் அறிவித்தல் செய்கின்றோம்.

சென்றல் கோப்பரேட் அன்ட் கென்சல்ரன்சி
சேவிசஸ் பிறைவேட் லிமிட்டட்,
கம்பெனியின் கம்பெனி செயலாளர்கள்.

இல. 116/10, றொஸ்மிட் பிளேஸ்
கொழும்பு - 00700

5- 256

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆவது இலக்க கம்பனி சட்டத்தின் 9வது பிரிவின் படியான அறிவித்தல்**

கம்பெனியின் பெயர் : மைன்ட்பயர் (பிறைவேற்) லிமிட்டெட்.

கம்பனி இலக்கம் : பீவீ 63791

பதிவு அலுவலகம் : இல. 47/58 பெரேரா மாவத்தை , பெலவத்த, பத்தரமுல்ல

சபையின் கட்டளைப்படி,

சாநாஸ் ஏ. மஹ்றூப்,
கம்பனி செயலாளர்.

5- 263

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆவது இலக்க கம்பனி சட்டத்தின் 9வது பிரிவின் படியான அறிவித்தல்**

கம்பெனியின் பெயர் : அஸ்ட்ரல் எம். எஸ். இன்ரநஷனல் (பிறைவேற்) லிமிட்டெட்.

கம்பனி இலக்கம் : பீவீ 63689

பதிவு செய்யப்பட்ட :
விலாசம் இல.65, 3ஆவது மாடி, 'சேனநாயக்க கட்டிடம்', ஹொஸ்பிடல் வீதி, கொழும்பு 1

5- 264

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின் கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது.

கம்பெனியின் பெயர் : ஹவ்லொக் சிட்டி (பிறைவேற்) லிமிட்டெட்.

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 25. 03. 2008

கம்பனியின் இலக்கம் : பீவீ 63568

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 18-01, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக நிலையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01

வை. எஸ். டீ சொய்ஸா,
கம்பனி செயலாளர்.

5- 265

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைத்தல் பற்றிய பகிரங்க அறிவித்தல்**

2008 ஏப்ரில் 8 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட இன்டர்ஓசன் ஷிப்பிங் ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவைப் பின்பற்றி பெயர், கம்பெனியின் இலக்கம், கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி என்பன பற்றிய பகிரங்க அறிவித்தல் இத்தால் கொடுக்கப்படுகின்றது.

கம்பெனியின் பெயர் : இன்டர்ஓசன் ஷிப்பிங் ஏஜென்சீஸ் (பிறைவேற்) லிமிட்டெட்.

கம்பனியின் இலக்கம் : பீவீ 63765

கம்பனியின் பதிவு அலுவலக முகவரி : தளம் 06, 'அக்செஸ் டவர்ஸ்', இல. 278, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

சபையின் கட்டளைப்படி,

பி. ஆர். செக்ரட்டேரியல் சேர்விசஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்.
பணிப்பாளர்,

5- 328

---

# ஏல விற்பனைகள்

**செலான் வங்கி பி எல் சி - கனேமுல்ல கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விஷேட சரத்துக்கள்) 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

'கடன் பட்டோர்' என்ற வகையில் கனேமுல்லையைச் சேர்ந்த ஹேரத் முதியான்சேலாகே சுசன்த அபேரத்ன என்பருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பிஎல்சி இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.

**1ஆவது ஏல விற்பனை - முதலாவது அட்டவணை**

கம்பஹா மாவட்டம், கம்பஹா பதிவுப்பிரிவு சியனே கோரளையைச் சேர்ந்த அதிகாரி பத்துவிலுள்ள மஹர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மஹர கன்டவியத்தபாலுவவில் அமைந்துள்ள கடவக்ககஹாவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். பி. ஜயசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 22.02.1999 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 10325 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 4 எனக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு சென்றடைகின்ற வீதியுடன் மேற்கூறப்பட்ட நிலைவரைப்பட இல. 10325 இற்கமைய கம்பஹா காணிப் பதிவகத்தில் C 501/ 259 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.13.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது. மஹர கன்டவியத்தபாலுவவில் அமைந்துள்ள கடவக்ககஹாவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற அளவையாளர் எஸ். பி. ஜயசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 22.02.1999 ஆந் தகிதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 10325 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 6 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (10 அடி அகலமுடைய வீதி) அனைத்தும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் மூன்று தசம் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.3.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 10325 இற்கமைய கம்பஹா காணிப்பதிவகத்தில் C 501/253 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணியைச் சென்றடைகின்ற முறை.-** கனேமுல்லையிலிருந்து பொக்குன சந்திவரை கடவத்தை வீதி ஊடாகச் செல்வதன் மூலம் வலதுபுறமாகத் திரும்பி ராகம வீதி ஊடாக சுமார் 600 மீற்றர்த் தூரம் பிரயாணம் செய்து கெசெல்வத்த வீதிக்கு வலதுபுறமாகச் செல்லவும். மேற்கூறப்பட்ட காணியின் இடது பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள காணியைச் சென்றடைவதற்கு உபுல் கராஜைத் தாண்டி latter வீதியில் சுமார் 200 மீற்றர் ஒருவர் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2008, யூன் 05 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

**2 ஆவது ஏல விற்பனை - இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணம் கம்பஹா பிரிவில் கம்பஹா மாவட்டத்திலுள்ள அளுத்குருகோரளையின் ராகம்பத்துவிலுள்ள கம்பஹா பிரதேச சபை எல்லையில் கலஹிட்டியாவ உப அலுவலக எல்லைகளுடன் பொல்வத்தவில் அமைந்துள்ள 'கொரகஹாவத்த' என்றழைக்கப்படு கின்ற காணியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ஜே. வி. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 15.03.2001 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 17326 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 5ஏ எனக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஒரு றூட் (0ஏ.1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் B 464/198 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு சென்றடைகின்ற வீதியுடன்.-** பொல்வத்தவில் அமைந்துள்ள கொரகஹாவத்த என்றழைக்கப்படு கின்ற காணியின் அனுமதிபெற்ற நில அளவையாளர் எம். டி. ஜே. வி. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 15.03.2001 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 17326 இல் குறிப்பிடப்பட்டுள்ள (12 அடி அகலமுடைய வீதி ஒதுக்கம்) சகிதம் துண்டு 5 பி எனக்குறிப்பிடப்பட்ட சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டுகள் எட்டு தசம் ஆறு ஐந்து பேர்ச் (0ஏ.0றூ. 8.65பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம். பக்கம் B 464/245 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** கனேமுல்ல நகரிலிருந்து சுமார் 1.7 கி. மீ. தூரம் கந்தான வீதி ஊடாக ட்ரான்ஸ்போமர் ஸ்டேசனிலும் 1.7 கி. மீ. தூரம் (266 பஸ் வழி) வெலிகம்பிட்டியவை நோக்கி நேராகச் சென்றதும் பதில் சுவர் பக்கமாக 12 அடி அகலமுடைய

*கற்குழி வீதிக்கு வலதுபுறமாகத் திரும்பி தபாற்கந்தோர் சந்தியை 100 மீற்றர் தாண்டியதும் மேற்கூறப்பட்ட கற்குழி வீதியின் (termination) இல் குறிப்பிட்ட காணியைச் சென்றடைவதற்கு சுமார் 50 மீற்றர் தூரம் செல்லவும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு*** *26.01.2007 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானி மற்றும் 14.12.2006 ஆந் திகதியுடைய டெயிலிமிரர் மற்றும் லங்காதீப பத்திரிகையையும் பார்க்கவும்.*

*மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை பகிரங்க ஏலத்தின் மூலம் 2008, யூன் 05 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

***கட்டணம் செலுத்தும் விதம்.***- *வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்காணும் தொகைகளைக் காசாக செலுத்துதல் வேண்டும்.*

*(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), (2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு வீதம் (1%), (3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனை களுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி PLC இல் வைப்புச் செய்தல் வேண்டும்.*

*காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை உமது "பொது முகாமையாளர்- (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, சிலிங்கோ செலான் டவர், இல. : 90, காலி வீதி, கொழும்பு 3 - தொலைபேசி : 2456284, 2456258, 2456263" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ள முடியும்.*

*துசித கருணாரத்ன,*
*அனுமதி பெற்ற ஏலதாரர்*
*மற்றும் நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்*

*ரி. அன்ட் எச். ஒக்சன்,*
*இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ.*
*தொலைபேசி : 2696155, 2572940.*

*5-292*

---

**பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விசேஷ ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***மேல் மாகாணம், ஹொரண பதிவுப் பிரிவுக்கு உட்பட்ட களுத்துறை மாவட்டத்தில், றைகம்கோறளையின் முன்வட்டபாகே பத்துவில், பண்டாரகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரககொடையில் அமைந்துள்ளதும், (அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எம். பீ. பியசிரி அவர்களால் வரையப்பட்ட, 13. 06.1999 ஆந் திகதியிடப்பட்ட, 3592 இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டதும், P.P. க/ 800 என்ற இலக்கத்தைக் கொண்ட அரககொடதெனிய எனவும் குறிப்பிடப்பட்ட இந்திகஹவெலதெனிய என அழைக்கப் பட்டு, குறித்துரைக்கப்பட்ட பகுதியின் மீள் நில அளவை மற்றும் உப பிரிவாக்கலாக இருந்ததனால்) அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் ஈ. ரீ. குணவர்தனவினால் வரையப்பட்டு 2002.11.23 ஆந் திகதிய 2410 ஆந் இலக்க மிடப்பட்ட நில அளவை வரைபடத்தில் காணித்துண்டுகள் 1, 2, மற்றும் 4 எனக் குறிப்பிடப் பட்டு, பிரிக்கப்பட்டதும் அடுத்துள்ள குறித்துரைக்கப்பட்ட காணி களும்.***

***காணியின் விஸ்தீரணம் :*** *துண்டு 1 04ஏ. 03றூ. 28.7பே*
*துண்டு 2 01ஏ. 02றூ. 21.2 பே*
*துண்டு 4 00ஏ. 01றூ. 21.2 பே*

***அத்துடன்***

***மேல் மாகாணம், ஹொரண பதிவுப் பிரிவுக்கு தற்சமயம் உட்பட்ட களுத்துறை மாவட்டத்தில், றைகம் கோரளேயின் (மேற்கு) முன்வட்டபாகே பத்து (மேற்கு) இல் அரககொடையில் அமைந் துள்ளதும், (நில அளவையாளர் நாயகத்தினால் 1974 ஏப்ரல் மற்றும் மே என திகதியிடப்பட்ட பீ. பீ. க / 800 இல் தெளிவாகக் குறித்துரைக்கப்பட்டதும்) அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் வை. கருணாரத்ன கொஸ்தாவினால் வரையப் பட்டு 1985.01.05 ஆந் திகதியிடப்பட்ட 339 ஆம் இலக்க வரை படத்தில் அரககொடதெனிய எனவும் குறிப்பிடப்பட்ட இந்திகஹ வெலதெனியவில் காணித்துண்டு 1சீ என அழைக்கப்பட்ட பிரிக்கப் பட்டு குறித்துரைக்கப்பட்ட சகல காணிகளும்.***

***01ஏ. 02றூ. 0பே ஐ விஸ்தீரணமாகக் கொண்டு ஒரே காணியாக அமைந்தது.***

*கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005 மார்ச் 9 ஆம் திகதியிடப்பட்ட 1586 இலக்க ஈட்டு உறுதிக் கடன் பத்திரத்தின் பிரகாரமான கொடுப்பனவைச் செலுத்தத் தவறிய லொக்குகே திலக் கபில டி சில்வாவினாலும், கொடிசிங்க ஆரச்சிகே லக்ஷ்மன் ரூபசிசங்கவினாலும் ஈடுவைக்கப்பட்டு பான் ஏஷியா பாங்கில் கோப்பரேஷன் பீஎல்சீ இற்கு (முன்னர் பான் ஏஷியா பாங் லிமிட்டெட் மற்றும் பான் ஏஷியா பாங்கில் கொப்பரேஷன் லிமிட்டெட் அழைக்கப்பட்டு வந்தது) அடகு வைக்கப்பட்டு மீளளிக்கப் படாத சொத்து.*

*பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ யினால் எமக்களிக் கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.***- *ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்தல் வேண்டும் :-*

1. *கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;*
2. *உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1 % விற்பனை வரி;*
3. *விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2 1/2% ;*
4. *75,000/- ரூபாவுக்கு மேற்படாத வகையில் மொத்த விளம்பரச் செலவில் 50%;*
5. *எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;*
6. *விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000/-*

*கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.*

இத்தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- தயவு செய்து 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி வெளியான "சிலோன் டெயிலி நியூஸ்" மற்றும் "சுடர் ஒளி" செய்திப் பத்திரிகைகளையும், 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி "லக்பிம" செய்திப் பத்திரிகை யையும் 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும் பார்வையிடவும்.

மேலதிக விபரங்கள் உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை, சிரேஷ்ட முகாமையாளர், சட்டப் பிரிவு, பான் ஏஷியா பாங்கிங் கொப்பரேஷன் PLC, 450, காலி வீதி, கொழும்பு 3 எனும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இலக்கங்கள் 2565573, 2565565.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரசாங்க அங்கீகாரம் பெற்ற ISO 9001:2000 இலக்க தராதரமுடைய ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணி செயல் முகவர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி. | கொழும்பு 5, |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி:011-2502680,2585408 |
| தொலை/பக்ஸ் : 081-2224371 | தொலை/பக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

5-295

---

## மக்கள் வங்கி – கம்பஹா கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின் கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் (ஹேனேகம, விலிம்புல கிராமத்தில் அமைந்துள்ளதும் துண்டு பி 17, 'எடித்லேண்ட் எஸ்டேட்' என அழைக்கப்படுவதுமான காணி) அரைவாசி கட்டப்பட்டுள்ள வீட்டுடன் ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : பத்து தசம் நான்கு பேர்ச்சுகள் (0ஏ.0றூ.10.4பே.))**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- வெலிவேரிய வீதியிலிருந்து கிரிந்திவெல வீதிவழியே 6ஆவது கி. மீ. கல்வரை சென்று அவ் 6ஆவது கி. மீ. கல்லிலிருந்து 50 மீற்றர் கடந்து சென்று, மண் வீதிக்கு (வலப்பக்கத்திலுள்ள இரண்டாம் வீதி) வலப்பக்கம் திரும்பி, அச்சந்தியிலிருந்து (5ஆவது தொகுதி) 100 மீற்றர் கடக்க வாகனம் செல்லும் வீதியை அடையாளம். விற்பனைக்குரிய இவ்வாதனம் வீதிக்கு இடப்பக்கத்தில் வீதியை நோக்கி அமைந்துள்ளது. உட்பிரவேசிக்கும் வீதி வாகனப் போக்குவரத்துக்கு உரியது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2008.06.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2007.2.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.9.25 ஆந் திகதிய 'தினமின', 'தினகரன்' மற்றும் 'டெய்லி நியூஸ்' ஆகிய பத்திரிகைகளையும் பாரக்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு, விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "முதுன்கொடை, பெலும்மஹர, கண்டி வீதி, இல. 131, மேற்கு வலயம் III, மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கங்கள் : 033-2222325, 033-2226741, தொலைநகல் இல. 033-2226165.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை, மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும். ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற ஏலதாரர், தரகர்,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும் விலை மதிப்பிடுநர்.

இலக்கம் 25 பி, பெல்மொன்ட் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-5756356

5-320

---

## மக்கள் வங்கி – பலங்கொடை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் 29(டி) பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**ஆதனம் ஏல விற்பனை செய்தல்**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், மெத கோரளை ஹெல உடபத்து பலங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் கொடகும்புர கிராம உத்தியோகத்தர் பிரிவில் நெதுன்கமுவை எனும் ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இறுதி கிராம வரைப்படம் 348 இல் துண்டு இல. 17 ஐக் கொண்ட கொன்கஹஹேன எனும் சைபர் தசம் இரண்டு ஒன்று நான்கு ஹெக்டயார் (ஹெக்டயர் 0.214) விசாலமான காணியும் அதனுள்ளமைந்துள்ள சகலதும் ஆகும். (இது இரத்தினபுரி காணி பதிவுசெய்யும் காரியாலயத்தில் ஜயபூமி காணி அபிவிருத்தி 10/1309 பந்திகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.)

சப்ரகமுவை மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், மெத கோறளை ஹெல உடபத்து மகவலதென்ன பாதையும் எல்லேபொல ஊரில் அமைந்துள்ள தெல்கஹலந்தை, சியம்பலாகஹவத்தை, தூன மடலகஹவத்தை, வலபெத்தஹேன, மஹஹேன அபெல்லகெடிய ஹேன ஆகிய கூட்டு காணிகளில் ஒரு பகுதிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஏ. இரத்தினம் அவர்களினால் 1994.12.18 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 4410 கொண்ட வரைப்படத்தில் இல. 2 பிரமானத்தால் இருபத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.25பே.) எனும் 0.063 ஹெக். விசாலமான காணியும் அதனுள்ளமைந்துள்ள சகலதும் இல. 550 கொண்ட வரைபடத்தில் இல. 10 பாதையின் தேவையின் உரிமையும் ஆகும். இது இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் 208/265 கொண்ட பக்கத்தின் கீழே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் என்மீது சாட்டப்பட்ட அதிகாரத்தின்கீழ் என்னால் 2008, யுன் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலத்திலே விற்கப்படும்.

அரச வர்த்தமானியில் 2001.02.23 ஆந் திகதியும், ''டெயிலி நியுஸ்'', ''தினமின'' பத்திரிகைகள் 2002.07.19 ஆந் திகதியும் பிரசுரித்துள்ள ஏல விற்பனைத் தீர்மான அறிவித்தலுக்குக் கவனத்தைச் செலுத்தவும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசித்தல்**- பலங்கொடையிலிருந்து கல்தொட பாதையில் 400 மீற்றர் அளவு பால்சபை சந்திவரை போய் வலதுக்குத் திரும்பி கொரககஹமட பாதையில் (தூனகஹமடல பாதை) 300 மீற்றர் நடந்து சென்றதும் பாதையின் இடதுபக்கமாக பாதைக்கு முகம் காட்டியதாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**-ஏலத்தின் இறுதியில் வெற்றியான கொள்வனவாளரால் கீழ்காணும் விதமாக பணத்தால் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையின் வரிக்கென உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலத்தின் கமிஷன் ஆக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) எழுதுவினைஞர் மற்றும் அறிவிப்பாளரினதும் கட்டணம் ரூபா 500 ;

(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;

(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இலக்கம் 54, புதிய நகர், இரத்தினபுரி, பிராந்திய முகாமையாளருக்குச் செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கங்கள் : 045-2223084, 045-2230818

உரிமை உறுதியையும் ஏனைய உரிய விபரங்களையும் மேல்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேல் குறிப்பிட்ட பிரகாரம் குறிப்பிட்ட பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் தற்போதைக்கே செலுத்தியிருக்கும் கொள்விலையின் 10% ப்பணத்தை திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கும் மீண்டும் ஆதனத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஏ. எஸ். லியனகே (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், அதிகாரம் பெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர், சத்தியம் செய்தமொழிபெயர்ப்பாளர்.

இலக்கம் 228/ஏ. வலவ்வத்தை, கெஸ்பாவ,
பிலியந்தலை.
தொலைபேசி இல. : 2703478, 0777459023

5-245

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.